1979 நவம்பர் 3]

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக வேலை செய்கின்றவர்கள் எத்தனை பேர்கள் இன்னும் நிரந்தரமாக்கப் படாமல் இருக்கிறார்கள்? இப்படிப்பட்டவர்கள் எல்லாம் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று முன்பு சொல்லப்பட்டது. ஆகவே இவர்களை எல்லாம் அரசு நிரந்தரமாக்கப்படுவதற்காக ஏற்பாடுகளை துரிதமாக செய்யுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, 115 பேர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள் என்பதையும், அவர்களையும் நிரந்தரமாக்குவதற்கு அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதையும் நான் முன்னாலேயே சொல்லி விட்டேன்.

திரு. என். பழனிவேல்: பொதுப் பணித் துறையில் பணி செய்கின்றவர்கள் யாராவது இறந்துவிட்டால் அவர்களுக்கு ஆண் வாரிசுகள் இல்லாமல் போகிறது பலருக்கு. அப்படிப்பட்டவர்களின் மனைவிகளுக்கு—அந்த விதவைகளுக்கு பொதுப் பணித் துறையில் வேலை கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா;

திரு. எம். வின்சென்ட், (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமில்லை.

மில் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
விக்கிரமசிங்கபுரம்

*வினா எண். 83— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள மில் தொழிலாளர்கள் கூட்டுறவுப் பண்டக சாலைக்கு உடனடியாக தேர்தல் நடத்துமாறு அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள ஹார்வி மில்ஸ் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலைக்கு உடனடியாக தேர்தல் நடத்துமாறு மேற்படி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஒரு கோரிக்கை கொடுத்திருந்தார்.

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1979 நவம்பர் 3

(ஆ) இது விஷயத்தை ஆராய்ந்து பார்த்ததில், நிர்வாகக் குழு கலைக்கப்படுவதற்குக் காரணமாக இருந்த குறைகள் மற்றும் சீர்கேடுகளை முழுமையாக களைய தனி அலுவலர் பதவி இன்னும் சிறிது காலம் நீடிக்கப்பட வேண்டுமென்று தெரிய வந்ததால், தேர்தலை தற்பொழுது நடத்த உத்தேசமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுப் பண்டக சாலையைப் பொறுத்தமட்டில், இந்த பண்டகசாலை நிர்வாகம் கலைக்கப் பட்டு $2\frac{1}{4}$ ஆண்டுகள் ஆகிறது. சென்ற மார்ச் மாத பட்ஜெட் கூட்டத்தில் நான் இதைப்பற்றி சுட்டிக்காட்டிய போது சீக்கிரமாக இங்கு தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியை அமைச்சர் அவர்கள் தந்தார்கள். ஆனால் டிப்பார்ட்மென்டில் இருக்கக்கூடியவர்கள் அவர்களுக்கு இருக்கக்கூடிய பல்வேறு பிரச்னைகளில் பலவற்றை அட்ஜெஸ்ட் செய்து கொள்வதற்காக தேர்தலை நடத்துவதற்கு காலத்தை நீட்டிக்கொண்டே போகிறார்கள். இந்த இரண்டேகால் ஆண்டு காலத்திற்குள் குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்திருக்கலாம். ஆகவே அரசாங்கமே இதில் நேரிடையாக தலையிட்டு உடனடியாக தேர்தலை நடத்த முன்வருமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் கடுமையான 11 குறைபாடுகள் இருந்ததின் காரணமாகத்தான் இந்த சங்கம் தனி அலுவலரின் பொறுப்பில் விடப்பட்டது. மிக துரிதமாக இந்தக் குறைகளை எல்லாம் களையவேண்டும் என்ற எண்ணத்தோடு அரசு விரைந்து மிக கவனத்தோடு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, மந்திரி அவர்களுக்கு தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். அங்கே சில குறைபாடுகள் இருக்கலாம். இருந்தாலும் நிர்வாகத்தைக் கலைக்கக்கூடிய அளவிற்கு கடும் குற்றச்சாட்டுகள் எதுவும் இருப்பதாக நான கருதவில்லை. இப்போது கூறப்பட்டிருக்கும் குறைபாடுகள் அடிப்படையில் கலைத்தது சரியானதுதானா என்பதைப்பற்றி விசாரணை செய்வதற்கு அரசாங்கம் ஒரு நீதிபதியை நியமிக்க முன்வருமா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, நான் இந்தச் சங்கத்தில் கடுமையான குற்றச் சாட்டுகள் இருக்கின்றன என்று கூறினேன். அந்த 11 குற்றச்

சாட்டுகளில் குறிப்பிடப்பட்டிருப்பதில் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது ஏறத்தாழ 7 லட்சம் ருபாய் அளவுக்கு அங்கேயுள்ள பை—லாவையும் மீறி அப்போதிருந்த நிர்வாகிகள் கடன் கொடுத்திருக்கிறார்கள். அப்படி இதனுடைய பொதுப்பணத்தை பை—லாவை மீறி கடன் கொடுத்திருப்பதை எல்லாம் பார்த்த பின்னால் தான், நல்லபடியாக இதனுடைய நிர்வாகத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்ற பொது நோக்கத்தோடு, நல்ல நோக்கத்தோடு, இந்த நிர்வாகம் கலைக்கப்பட்டு, இபபோது தனி அலுவலரின் கீழ் சீரமைக்கப் பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு ஸ்தாபனங்களில் ஏதாவது தவறுகள் இருக்கின்றன என்ற காரணத்தைக் காட்டி நிர்வாக சபையைக் கலைத்துவிட்டு, தனி அதிகாரிகளைப் போடுகிறார்கள். அப்படி தனி அதிகாரி போட்டு ஆறு மாத காலத்திற்குள் குறைகளை எல்லாம் களைந்துவிட்டு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபையை அமைக்கவேண்டும். அதுதான் முறையாக இருக்கும். நிர்வாக சபையைக் காட்டிலும் தனி அதிகாரிகளின் ஆட்சியில் தவறுகள் அதிகமாக நடக்கிறது என்பதை நாம் அனுபவத்தில் பார்த்து வருகிறோம். ஆகவே இப்படி கலைக்கப்பட்ட கூட்டுறவு ஸ்தாபனங்களில் எல்லாம் ஆறு மாதத்திற்குள் தேர்ந்தெடுக்கப் பட்ட போர்டை போட வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரிசாமி அவர்களின் உணர்வை முழு மனதோடு அரசு ஏற்கிறது. அந்த அடிப்படையில்தான் வரயிருக்கின்ற புதிய கூட்டுறவு சட்டத்தில் இப்படிப்பட்ட விதிகளையெல்லாம் நிர்ணயிக்க வேண்டுமென்று அரசு ஆலோசித்துக் கொண்டிருக் கின்றது என்பதை இந்த மன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் அவசரமாக தமிழகத்தில் கூட்டுறவு சொசைடிகளில் அட்வைசரி கமிட்டிகள் நியமிக்கப்பட்டு இருக்கின்றதா? அதிலே பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் இந்த முயற்சி எடுக்கப்படவில்லை. சென்ற நிதிநிலை அறிக்கையின்போது இதே மாமன்றத்தில் வாக்குறுதி எடுத்ததன் தொடர்பாக, தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் உறுப்பினர் அழகிரிசாமி அவர்கள் மூலக்கேள்வியை விட்டுத் தேர்தல் பற்றிக் கேட்டார்கள். திரு அம்பிகாபதி அவர்கள் அதற்கும் மேலே ஒரு படி சென்று விட்டார்கள். இது சரியல்ல, துணைக் கேள்வி, மூலக்கேள்வியை ஒட்டியதாக இருக்க வேண்டும்.

கீழ்நாச்சிப்பட்டுப் பகுதியில் விவசாயக் கூட்டுறவுச் சங்கம்.

* வினா எண். 84 — திரு. த. வேணுகோபால்; மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை வட்டம், சோ. கீழ்நாச்சிப்பட்டு மதுரா அரசம்பட்டு கிராமத்தில் விவசாய கூட்டுறவு நாணயச் சங்கம் திறக்க வேண்டுமென்று மனு அரசாங்கத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) கீழ்நாச்சிப்பட்டு கிராமத்தில் ஏற்கனவே செயல்பட்டு வந்த கூட்டுறவு விவசாய கடன் சங்கத்தின் நடவடிக்கைகளை முடிவுகட்ட 1970-ல் உத்தரவிடப்பட்டு, அச்சங்கம் கலைப்பிலுள்ளது. அச்சங்கத்தின் விவகார எல்லையிலுள்ள கிராமங்கள் திருவண்ணாமலை கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தின் எல்லையுடன் இணைக்கப்பட்டு அச்சங்கம் சம்பந்தப் பட்ட கிராமங்களுக்கு நல்லமுறையில் சேவை செய்து வருவதால் புதிய சங்கம் அமைக்கவேண்டிய அவசியமில்லையென தீர்மானிக்கப்பட்டது.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசம்பட்டு கிராமத்தில் ஏற்கனவே விவசாய கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டு, மீண்டும் அது கலைக்கப் பட்டு, தற்போது திருவண்ணாமலை சங்கத்தோடு இணைக்கப் பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். விவசாயிகளின் நன்மையைக் கருதி, அங்கே கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டது. அந்த கூட்டுறவு சங்கத்திற்கு அங்கே நிரந்தரமாக ஒரு உர கோடவுன் இருக்கின்றது. அப்பேர்ப் பட்ட கோடவுனை வீணாக்காமல், விவசாயிகளின் நன்மையைக் கருத்தில் கொண்டு, அரசம்பட்டு கிராமத்தில் விவசாய கூட்டுறவு சங்கத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.